IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.226/2018
DEPOSITION OF WITNESS (DW1)

ஆரம்பநேரம் :3.20 p.m.

பி.வா.சா.1 சாட்சி பாண்டி த.பெ.கருப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 05.03.2025 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. வாதியின் வழக்கிற்கு எதிர்வழக்குரை மற்றும் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்கோரிக்கையில் தாவாச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் ஆக்கிரமிப்பு உள்ளது என்றும் அதனை அகற்றுவதற்கு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று 1960ஆம் ஆண்டின் பத்திரத்தை வைத்துதான் கேட்கிறேன் என்றால் சரிதான். மேற்படி 1960ஆம் ஆண்டின் கிரையபத்திரத்தில் 3சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் 3 சர்வே எண் கொண்ட 2சொத்து.

2. சர்வே எண் 70/3ல் 36 செண்டும் சர்வே எண் 70/13ல் 26 செண்டும் சர்வே எண் 70/1ல் 3செண்டும் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1960ஆம் ஆண்டின் கிரையபத்திரம் கருப்பாயி அம்மாளும், முத்தையாத்தேவரும் சேர்ந்து எனது தகப்பனாருக்கும், எனது பெரியப்பாவான ஒச்சனத்தேவருக்கும் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. எனது எதிர்கோரிக்கையில் சர்வே எண் 70/3, சர்வே எண் 70/13ல் உள்ள 62 செண்டில் மேற்கு பக்கம் முத்தையாத்தேவருக்கு 20 3/4 செண்டும் கிழக்கு பக்கம் ஒச்சனத்தேவருக்கு 20 1/2 செண்டும் அதற்கு கிழக்கு 20 3/4 செண்டு எனது தகப்பனார் கருப்பத்தேவரக்கு பாகமாக கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி பாகத்திற்கு எழுத்துப்பூர்வமான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. எனது எதிர்கோரிக்கையில் சர்வே எண் 70/3ம் சர்வே எண் 70/13ம் சர்வே எண் 70/6 மற்றும் சர்வே எண் 70/7 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு எனது தந்தை எனக்கும் எனது அண்ணனுக்கும் உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். எனது எதிர்கோரிக்கையில் சர்வே எண் 2/8B என்பது 3ம்நபருக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5. எனது எதிர்கோரிக்கையில் எனது சகோதரர் பாண்டி என்பவர் இராணுவத்தில் வேலை பார்த்ததாகவும் அவருக்காகவும் எதிர்கோரிக்கையை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரர் பாண்டிக்காகவும் வழக்கு நடத்துவதற்கு பவர் ஏதும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் தாவாச் சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் எனது சகோதரரை எதிர்கோரிக்கையில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் தேவையான தரப்பினரை சேர்க்காத தோசத்திற்கு எதிர்கோரிக்கை உட்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. வாதிக்கு பாத்தியப்பட்ட பழைய சர்வே எண் 71/2 தற்போதைய சர்வே எண் 3/2 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் 71/2ஐ வாதியின் தாயார் பாப்பம்மாள் 20.8.1991ம் வருடம் சீனியம்மாள் என்பவரிடம் இருந்து

மண்ஓட்டடை வீடாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் அவர்கள் சொல்லியுள்ளார்கள் எனக்கு தெரியாது. 1991ம் கிரைய பத்திரத்தில் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. 1960ம் ஆண்டு கிரையபத்திரத்தில் உள்ள 62 செண்டிற்கு நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 70/3 லெட்டரில் செண்டு 36, சர்வே எண் 70/13 லெட்டரில் செண்டு 26 ஆக மொத்தம் செண்டு 62ல் மேல்பக்கம் எங்கள் அனுபவத்தில் இருந்து நாளது தேதியில் தங்கள் சுவாதீனத்தில் ஒப்புவித்திருக்கிற நிலத்திற்கு நான்குமால் கண்மாய்கரைக்கும் தெற்கு, நல்ல கருப்பத்தேவர் பாகத்திற்கும் கிழக்கு, கந்தன் அம்பலம் நிலத்திற்கும் வடக்கு, தங்கள் கைவசம் இருக்கும் நிலத்திற்கும் மேற்கு இந்த நான்குமாலுக்குள்பட்டு 20 3/4 செண்டு கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான்.

8. மேற்படி கிரையம் வாங்கிய தேதியில் கண்மாய் கரைக்கும் தெற்குபக்கம் நிலமாகத்தான் இருந்தது என்றால் சரிதான். திருமங்கலத்திலிருந்து தென்வடலாக செல்லும் செங்குளம் ரோட்டில் சென்று கிழமேலாக செல்லும் கண்மாய்கரை வழியாகத்தான் செங்குளம் செல்ல வேண்டும் என்றால் சரிதான். செங்குளம் ரோட்டிற்கு வடக்கே கண்மாயும் கண்மாய்கரைக்கு தெற்கே உள்ள நிலத்தையும் ஆர்ஜிதப்படுத்தியும்தான் தேசிய நெடுஞ்சாலை ரோடு செல்கிறது என்றால் சரிதான்.

9. சர்வே எண் 70/3ம் சர்வே எண் 70/13ம் சேர்ந்துதான் சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7 என்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்70/6, சர்வே எண் 70/7 ன்

புதிய டவுண்சர்வே எண் 2/7 என எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7என் புதிய டவுண்சர்வே எண் 2/7 என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி விபரம் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. 13.1.2007 உயிலில் எனது தகப்பனார் எனக்கும், எனது சகோதரருக்கும் எழுதிக்கொடுத்துள்ள உயிலில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் சரியானது என்றால் சரிதான். மேற்படி உயிலில் கண்டுள்ள நான்குமாலும் சரியானது என்றால் சரிதான். மேற்படி உயிலில் Cஅட்டவணை சொத்தில் உள்ள அத்தனை சொத்து விபரங்களும் சரியானதா என்றால் சரிதான். குறிப்பாக சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7க்கு பி.வா.சா.ஆ.3ல் கூறியுள்ள நான்குமால் சரியானதா என்றால் சரியானதுதான்.

11. சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7 லெட்டரில் கட்டுப்பட்ட மொத்தம் செண்டு 32 1/2க்கு நான்குமால் செங்குளம் செல்லும் தென்வடல் ரோட்டிற்கும் மேற்கு, கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு, பாண்டி (பாண்டி என்பவர் எனது பெரியப்பா ஒச்சனத்தேவரின் மகன்) நிலத்திற்கும் கிழக்கு, மொக்கச்சாமி மகள் செல்லம்மாள் நிலத்திற்கும் வடக்கு என்று பி.வா.சா.ஆ.3ல் கூறப்பட்டுள்ளது சரியானதா என்றால் சரியானதுதான்.

12. C அட்டவணை சொத்தில் உள்ள 2வது இலக்கச் சொத்தில் சர்வே எண் 70/3 க்கு டவுண் சர்வே எண் 2/3 என்று பி.வா.சா.ஆ.3உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் கூறியுள்ள சர்வே எண்கள் 70/3, 70/13க்கு

தவறுதலாக சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

13. பி.வா.சா.ஆ.3ல் 1வதுஇலக்கச் சொத்தாக காட்டப்பட்டுள்ள சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7க்கு அருகே வாதிகளின் இடம் இருந்தால் மேற்படி பி.வா.சா.ஆ.3 உயிலில் நான்குமாலாக வாதிகள் இடமும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் அவ்வாறு குறிப்பிடவில்லை என்பதாலேயே வாதிகள் இடமும் எதிர்கோரிக்கை இடமும் வெவ்வேறானவை என்றால் தவறு. வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தைதான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

(6.9.2007தேதியிட்ட பாகவிடுதலை பத்திரம் குறித்து சாட்சியிடம் மேற்படி பத்திரத்தை காட்டி கேள்விகள் கேட்கப்பட்டது மேற்படி பத்திரமானது நகலாக உள்ளதால் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டதால் மேற்படி பத்திரம் குறித்து சாட்சி விசாரணையானது மேற்கொள் அனுமதிக்கப்படவில்லை)

14. பி.வா.சா.ஆ.6ல் சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7ல் நிலஆர்ஜிதம் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 மூலம் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு இழப்பீடானது எந்த ஆவணத்தின் அடிப்படையில் பெற்றேன் என்றால் 1960ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரையபத்திரம் மூலம் பெற்றேன். (பி.வா.சா.ஆ.1) மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் எங்குள்ளது என்றால் நிலஆர்ஜித அலுவலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

15. பி.வா.சா.ஆ.6ல் சர்வே எண் 70/6 மற்றும் சர்வே எண் 70/7 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதற்கான பழைய சர்வே எண் 70/3, சர்வே எண் 70/13 என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

எனது எதிர்கோரிக்கையில் சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7ல் கட்டுப்பட்ட 32 1/2 செண்டில் தென்கிழக்கு மூலையில்தான் வாதி ஆக்கிரமிப்பு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6ல் சர்வே எண் 70/6, சர்வே எண் 70/7ல் சுமார் 790 சதுரமீட்டர் (19 1/2 செண்டு) தேசிய நெடுஞ்சாலைக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான்.

16. மொத்தமுள்ள 32 1/2 செண்டில் 19 1/2 செண்டு கழித்து போக மீதமுள்ள 13 செண்டுதான் எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி எனக்கு பாத்தியப்பட்ட 13 செண்டில் மட்டும் ஆக்கிரமிப்பு உள்ளதாக கூறாமல் ஏற்கனவே நிலஆர்ஜிதம் செய்யப்பட்ட 19 1/2செண்டையும் சேர்த்து மொத்தமுள்ள 32 1/2 செண்டு இடத்திற்கும் சேர்த்து எதிர்கோரிக்கை தாக்கல் செய்ததது சட்டப்படியானது அல்ல என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து விபர நான்குமாலுக்கு முரணாக எதிர்கோரிக்கை சொத்து விபர நான்குமால் வாதியின் சொத்தை அபகரிப்பதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

17. எனது சொத்தும், வாதியின் சொத்தும் அருகருகே இருந்திருந்தால் வாதியின் சொத்து விபர நான்குமாலில் எனது இடம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலமாக வழக்குச் சொத்தை அளவீடு செய்ய மனு செய்திருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவாச் சொத்தை அளவீடு செய்யும்போது நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 19 1/2 செண்டை கழிக்காமல் அளந்தார் என்றால் சரியல்ல.

18. நீதிமன்ற ஆணையர் மேற்படி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 19 1/2 செண்டையும் சேர்த்து அளக்காமல் பூமியில் உள்ள அளவை அப்படியே அளந்ததால்தான் வாதி எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் நான் பி.வா.சா.ஆ.7 பட்டாவை பெற்றேன் என்றால் சரிதான்.

19. நான் முறையான சர்வே எண் மற்றும் முறையான நான்குமால் விபரம் குறிப்பிடாமல் எனது எதிர்கோரிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை நான் வாதியிடம் குறைந்த விலைக்கு கேட்டேன் என்றும், வாதி தரமறுத்ததால் வாதி சொத்தை அபகரிக்க வழக்கிற்கு பின்னிட்டு பட்டாவை ஏற்படுத்தி எதிர்கோரிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு எனது எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவுடையும் நேரம் :4.35 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.